**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 04-07-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-07-04 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-07-05 | 2023-07-06 | 2023-07-07 | 2023-07-08 | 2023-07-09 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 6.0 | 0.0 | 0.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 37.0 | 36.0 | 36.0 | 37.0 | 36.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 26.0 | 25.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 60 | 60 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 14 | 8 | 10 | 10 |
| காற்றின் திசை (கோணம்) | 230 | 200 | 200 | 250 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஜூலை 05 ,06 மற்றும் 09 ஆகிய தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 36.0°C- 37.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 25.0°C- 27.0°C இருக்கும். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 08 - 14கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

காய்கறிகள் விதைக்கும் பருவமாதலால் விவசாயிகள் 1 கிலோ விதையுடன் 4 கிராம் பேசில்லஸ் சப்டிலிஸ் கலந்து விதை நேர்த்தி செய்து விதைத்து நாற்றழுகல் நோய் வராமல் தவிர்க்லாம்.

## குறுஞ்செய்தி :

பெறக்கூடிய மழையை பயன்படுத்தி மானாவாரியில் தீவனச் சோளம் அல்லது தட்டை பயிர் விதைப்பு மேற்கொள்ள வேண்டும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் கவனத்திற்க்கு காற்றின் உள்ள அதிக ஈரப்பதத்தினால் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலுக் கானவாய்ப்பு உள்ளது. இலைப்பேன் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த, அசாடிராக்ட்டின் 2 மிலி /லி ஒட்டும்பசை உடன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| உளுந்து | 30 மற்றும் 45 வது நாட்களுக்குள்ளாக இலைவழிதெளிப்பாக யூரியா 2% தெளிப்பது உளுந்து மற்றும் பச்சைப்பயறின் விளைச்சலை அதிகரிக்கும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | தக்காளியில் முன்பருவ இலைக்கருகளை கட்டுப்படுத்த நடவு செய்த 30 மற்றும் 50 நாட்களில் ஹெக்ஸகோனசோல் 5% எஸ்சி @ 1 மி.லி /லி. (அல்லது) ப்ரோபிகோனசோல் 25% இசி @ 1 மி.லி/ லி தெளிக்கவும். |
| மிளகாய் | மிளகாய்யில் இலைபேன்னை கட்டுப்படுத்த எமாமெக்டின் பென்சோயேட் 5% எஸ்ஜி@ 4 கிராம் /10 லி. (அல்லது) ஸ்பினோசாட் 45% எஸ் சி @3.2 மி.லி. /10 லிட்டர் தெளிக்கவும். |
| தென்னை | தற்போது பெய்துள்ள மழையின் காரணமாக மண்ணில் காணப்படுகின்ற ஈரப்பதத்தினை பயன்படுத்தி தென்னைக்கு நுண்ணுயிர் உரம் இடுதல் நல்ல பலனை கொடுக்கும். ஆகையால் விவசாயிகள், தென்னை மரம் ஒன்றிற்கு 50 கிராம் அஸோஸ்பைரில்லம், 50 கிராம் பாஸ்போபாக்டீரியா உடன் 50 கிராம் (வேம்) வேர் உட்பூசணத்தை தேவையான அளவு கம்போஸ்ட் அல்லது மக்கியதொழு உரத்துடன் கலந்து இளம் வேர்களில் படும்படி இடவேண்டும். மீண்டும் இதனை 6 மாத இடைவெளியில் தொடர்ந்து செய்தால் தென்னை சாகுபடியில் நல்ல பலனைப் பெறலாம். உயிர் உரங்களை இராசயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொக்ல்லிகளோடு உயிர் உரங்களை கலந்து வைக்கக்கூடாது. |